


அலையாத்தி | மரம் 35 | செப்டம்பர் 2008


உள்ளே……

- ☛ வளர்கல்வி இயக்கம்
- ☛ நாலும் தெரிஞ்சிக்கிட்டோம்
- ☛ பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் மூலம் தொழில் நிறுவனங்களில் பயிற்சி
- ☛ மக்கள் பங்கேற்ப்பால் சீரான வாய்க்கால், வடிகால்கள் ஒரு கண்ணோட்டம்
- ☛ விழி திறந்தந்தால் வழி பிறக்கும்
- ☛ மேம்பாட்டுப் பணியில் மக்களின் பங்கு
- ☛ ஒரு பள்ளிக்கு ஏற்புடைய குறைந்தபட்ச தரம்



ஆலோசகர்

திரு.ஜெரால்டு

ஆசிரியர் குழு

E.பழனி

K.ஏகாம்பரி

R.சதீஷ் குமார்

K.செல்வம்

Y.அருள்பதிநாதன்

அலுவலக முகவரி

மே/பா.பெட்ராக்

குடியிருப்பு எண்.5, மேட்டுபங்களா,

புதிய கடற்கரைச் சாலை,

காடம்பாடி, நாகப்பட்டினம்-611 001.


தலையங்கம்

**அன்பு வாசகர்களே நலம் தானே! உங்களோடு ஒரு நிமிடம் ...**

## உலக எழுத்தறிவு நாள்

அனைத்துலக எழுத்தறிவு நாள் உலகெங்கும் செப்டம்பர் 8-ம் நாளன்று கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நாளை யுனெஸ்கோ நிறுவனம் நவம்பர் 17, 1965-ல் உலக எழுத்தறிவு நாளாகப் பிரகடனம் செய்தது. இது 1966-ம் ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது. எழுத்தறிவின் முக்கியத்துவத்தை தனிப்பட்ட மக்களுக்கும், சமூகத்துக்கும், அமைப்புகளுக்கும் அறியவைப்பது இதன் முக்கிய நோக்கம் ஆகும்.



எந்த மொழியிலும் சுலபமாக வசனங்களை எழுதவும், படிக்கவும் தெரியாமையே எழுத்தறி வின்மையாகும் என ஐ.நா.வின் சாசனம் எழுத்தறி வின்மையை வரையறுக்கிறது.

“இருட்டைக்கண்டு குழந்தை பயப்படுகிறது, அதை மன்னித்து விடலாம். ஆனால் வெளிச்சத்தைக் கண்டு பயப்படும் மனிதர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். அவர்களை எப்படி மன்னிப்பது” என்று கேட்டார் பிளேட்டோ. அறியாமை என்னும் இருளை இல்லாமையாக்கி, எழுத்தறிவு என்னும் ஒளியை ஏற்றுவதற்கு இச்சமூகத்தில் பல சிரமங்களை சந்தித்துதான் ஆக வேண்டியிருக்கிறது.

நாங்கள் தான் பாமரனாகி விட்டோம், எங்கள் பிள்ளைகளாவது படித்து சமூகத்தில் உயர வேண்டும் என காலம் காலமாக நமது முன்னோர்கள் தேய்ந்து போன ஒலித்தகடாக கூறி வந்ததை மாற்றுவதற்கு எத்தனையோ வயது வந்தோர் கல்வி முறைகள், முறைசார கல்வி முறைகள் தற்போது வளர்கல்வி இயக்கம் என அரசு மக்களை கல்வியில் பயன்பெற செய்து வருகிறது. ஒவ்வொருவரும் முன்னேற பல படிகள் இருந்தாலும் கல்வி ஒன்றே முன்னேற்றத்தின் முதல்படி என்பதை கருத்தில் கொண்ட அரசு இன்று நம்முடைய அடிப்படை கல்வி முறையில் “அனைவருக்கும் கல்வி திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இதனை வலுசேர்க்கும் வண்ணம் இலவச கல்வி, சத்தான மதிய உணவு மற்றும் இலவச புத்தகம் மற்றும் சீருடை, வாரம் 3 மூட்டைகள் வழங்கி ஊக்கபடுத்தி வருகிறது.

அரசின் இவ்வாறான நலத்திட்டங்களும், கொள்கைகளும் எதிர்காலத்தில் கல்லாமையை இல்லாமையாக்கி நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

நட்புடன் .... ✍ஆசிரியர்

## எங்களைப் பற்றி ...

நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடற்கரையோர கிராமங்களில் பேரழிவை உருவாக்கிய சுனாமிக்கு பிறகு மக்களின் மறுவாழ்விற்கு தேவையான தகவல்களை பயனாளிகளுக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் மற்றும் அரசுக்கும் கிடைக்கச் செய்ததில் முக்கிய பங்காற்றிய தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் வளமையத்தின்(NCRC) வழித்தோன்றலாக ஜனவரி 2008-ல் ஆரம்பிக்கப்பட்ட பெட்ராக் நிறுவனம் (Bedroc - Building and Enabling Disaster Resilience of Coastal Communities ) கடலோர மக்களின் மேம்பாட்டிற்காகவும் பேரிடர் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் நலிவுகளை குறைக்கவும் சமுதாயம் சார்ந்த முன்னோடி திட்டங்களை உருவாக்கி அதனை நடைமுறைபடுத்தி ஏனையோர் பின்பற்றக்கூடிய மாதிரிகளை உருவாக்குவதை நோக்கமாக கொண்டு செயல்படுகிறது. சுனாமி சம்பந்தமான மறுவாழ்வு தகவல்களை வழங்கிக் கொண்டிருக்கும் திரைநெட்டின் (Trinet) இந்த செய்தி மடலானது, பெட்ராக் நிறுவனத்தின் மின்னாட்சிக்கான (e-governance) ஓர் ஆதாரமாக செயல்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

# வளர்கல்வி இயக்கம்

## நாகப்பட்டினம் மாவட்டம்

தமிழ்நாட்டில் 30 மாவட்டங்களில் வளர்கல்வி இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் வளர்கல்வி இயக்கமானது சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வளர்கல்வி இயக்கத்தலைவராகவும், மாவட்ட கல்வி அலுவலர் அவர்கள் வளர்கல்வி இயக்க செயல்பாட்டிற்கு சிறப்பாக வழிகாட்டியும் வருகிறார்கள் என வளர்கல்வி இயக்கத்தின் செயல்பாடுகளுக்கு அறிமுகம் கொடுத்து தொடர்கிறார் மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி.இரா.இலதா

நாகப்பட்டினம் மாவட்டத்தில் வளர்கல்வி இயக்கமானது 10 வளர்கல்வி மையங்களுக்கு ஒரு தலைமை வளர்கல்வி மையம் வீதம் 47 தலைமை வளர்கல்வி மையங்களும், 434 ஊராட்சிகளில் 424 வளர்கல்வி மையங்களும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றது.

**வளர்கல்வி இயக்கத்தின் முக்கிய நோக்கம்:**

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கல்லாதோர் அனைவரையும் எழுத்தறிவுள்ளவராக மாற்றி கற்பித்தல் மூலமாக பொதுவாழ்வில் திறம்பட வாழச்செய்வதோடு, புதிதாக கற்றோர் தான் பெற்ற கல்வியை வலுப்பெற செய்யவும், எழுத்தறிவு திறனை விரிவுப்படுத்தவும், சுயசார்புத்தன்மை அடையவும், தனிநபர் மேம்பாட்டுத் திட்டம், சமநிலை கல்வித்திட்டம், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டம், வருவாய் பெருக்குத்திட்டம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் திட்டமாகும்.

**வளர்கல்வி இயக்க மையத்தின் முக்கிய செயல்பாடுகள்**

1. வகுப்பு நடத்துதல் (கற்பித்தல், கற்றல், செயல்பாடுகள்)
2. நூல் நிலையம், வாசிப்பு மையம்
3. செய்திதாள் வாசிப்பு மையம் மற்றும் கலந்துரையாடல் மையம்
4. தொழில் பயிற்சி திட்டங்கள் மற்றும் திறன் வளர்த்தலுக்கான செயல்பாடுகள்
5. மனமகிழ் மன்றம் மற்றும் கலை நிகழ்ச்சி விழாக்கள் நடத்துதல்
6. விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பிற நிகழ்சிகள் நடத்துதல்
7. ஒருங்கிணைந்த தகவல் வழங்கும் மையம்
8. சமுதாய மையம்

விழிப்புணர்வு

1. எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு
2. வளரிளம் பருவத்தினருக்கான பயிற்சி
3. குழந்தை தொழிலாளர் ஒழிப்பு முறை பற்றிய விழிப்புணர்வு
4. சுகாதார விழிப்புணர்வு
5. கழிவறை அவசியம் பற்றிய விழிப்புணர்வு
6. கற்பதனால் ஏற்படும் பயன்கள் பற்றிய விழிப்புணர்வு
7. போலியோ சொட்டு மருத்தின் பயன்கள் மற்றும் குடும்ப கட்டுப்பாட்டின் அவசியம் பற்றிய விழிப்புணர்வு
8. பெண் சிசுகொலை, வரதட்சணை கொடுமை பற்றிய விழிப்புணர்வு.
9. தொழிற்பயிற்சியின் மூலம் கிடைக்கும் வருமானம் பற்றிய விழிப்புணர்வு

அனைத்தும் வளர்க்கல்வி இயக்கத்தின் மூலம் வீதி நாடகம், பேரணி, துண்டு பிரசுரம், கலைநிகழ்ச்சிகள் மற்றும் ஒலிபெருக்கி மூலமாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம்.

**மகளிர் சுயஉதவிக்குழுக்கள்**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் வளர்கல்வி இயக்கத்தின் மூலம் சுமார் 1332 மகளிர் சுயஉதவிக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு தேவையான நோட்டுகள் 8 வகையான பதிவேடுகள் வழங்கப்பட்டு அதனை பராமரிக்கும் பயிற்சியும் அளிக்கப்பட்டது. வங்கியின் மூலமாக கடன்கள் வழங்க ஆவண செய்யப்பட்டது. மேலும் பல்வேறு தொழிற்பயிற்சிகள், கல்லாதவர்களுக்கு கற்பித்தல் பயிற்சி ஆகியவை அளிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் அவர்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்ளவும் இத்திட்டம் சிறப்பாக செயல்படுகிறது.

**மகளிர் சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்:**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் வளர்கல்வி இயக்கத்தின் மூலம் மகளிர் சிறப்பு எழுத்தறிவு திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவர்களுக்கு கல்வி கற்க தேவையான நோட்டு புத்தகங்கள் மற்றும் எழுதும் உபகரணங்கள் வழங்கப்பட்டு அத்துடன் அறிவொளி தீபம் 1,2 மற்றும் 3 வழங்கப்பட்டுள்ளது.



மகளிர் சிறப்பு எழுத்தறிவு திட்டத்திற்கான மதிப்பீட்டு தாள் பயிற்சி கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில், மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி.இரா.இலதா அவர்கள் உரையாற்றுகிறார்

இதனால் கல்லாத மகளிரை இனம் கண்டறிந்து அவர்களுக்கு கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் 11 வட்டாரங்களில் 18900 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு தற்போது இத்திட்டத்தின் மூலம் 13424 பேர் பயனடைந்துள்ளனர்.

**திறந்த நிலைக்கல்வித் திட்டம்:**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கல்வியறிவு பெறாத மக்கள், ஆரம்பக் கல்வியைத் தொடர இயலாதவர்கள் மற்றும் தொடர்கல்வியை இடையில் விட்டோர் ஆகியோர் என 9 வயது முதல் 45 வயது வரை உள்ளவர்களுக்கு வளர்கல்வி இயக்கத்தின் சார்பில் திறந்தநிலைக் கல்வித் திட்டத்தின் மூலமாக கல்வி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**வளர்கல்வி மையங்களுக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள்:**

அனைத்து வளர்கல்வி மையங்களுக்கும் 1. நோட்டு புத்தகங்கள், 2.கல்வி கற்கும் உபகரணங்கள், 3. சிலேட், சிலேட் குச்சி மற்றும் கரும்பலகை, செய்தித்தாள்கள், 5.விளையாட்டு உபகரணங்கள், 6.நூல் நிலையங்கள், 7.சைக்கிள், 8.தையல் இயந்திரங்கள், 9.மேஜை, 10.நாற்காலி, 11.பென்ஞ்ச், 12.டெஸ்க், 13.பீரோ, 14. இரும்பு அலமாரிகள், 15.எமர்ஜென்சி லேம்ப் மற்றம் வளர்கல்வி பணியாளர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.

**எதிர்கால திட்டங்கள்:**

எதிர் வரும் காலங்களில் வளர்கல்வி இயக்கத்தை செம்மையாக செயல்படுத்திட கீழ்கண்ட செயல்பாடுகள் நடைமுறை படுத்தப்படும்.

1. கல்லாதவர்களின் எண்ணிக்கை குறைத்தல்

2.சுயதொழில் பயிற்சிகளைக் கொடுத்து அவர்களை ஊக்குவித்து வாழ்க்கை தரத்தில் மேம்பாடு அடைய செய்தல்

3. எழுத்தறிவில் ஆணுக்கு பெண் சமமான நிலையை உருவாக்குதல்

4. முழு எழுத்தறிவுள்ள மாவட்டமாக மாற்றுதல்

5. அனைத்து அரசு நலத்திட்டங்களையும் மக்கள் அறிந்திட செய்தல்

6. சிறைச்சாலை மையம் துவக்கம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள நாகப்பட்டினம் மயிலாடுதுறை, சீர்காழி மற்றும் தரங்கம்பாடி ஆகிய நான்கு கிளை சிறைச்சாலைகளிலும் உள்ள சிறைவாசிகளுக்கு கல்வி அறிவு மையம் துவக்கப்படவுள்ளது. இதில் வளர்கல்வி மையப் பொறுப்பாளர்கள் மூலம் அவர்களுக்கு எதிர்கால திட்டமாக கல்வியறிவு கற்றுக் கொடுக்கப்படவுள்ளது என தமது துறையின் சிறப்பான செயல் பாடுகளையும், எதிர்கால திட்டங்களையும் பற்றி விரிவாக கூறி விடைபெறுகிறார் மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி.**இரா.இலதா** அவர்கள்.

பேட்டியை முடித்துக்கொண்டு அலுவலகத்திலிருந்து வெளிவருகையில் புதுகை வெற்றி நிலவனின் அறிவொளி பாடல் நம் காதுகளில் ரீங்காரமிடுகிறது.

**தன்னேன்னே தன்னேன்னே தன்னேன்னே தானே**
**தன்னேன்னே தன்னேன்னே தன்னேன்னே**
**நாங்க நேத்துவரை சும்மாத்தான் இருந்தோம் – இப்போ**
**நேரம் வந்து கூடிப்போச்சு படிப்போம்**
**(தன்னேன்னே)**

**பேரெழுதி ஊரெழுதி தலையெழுத்த அழிச்செழுதி**
**பாக்குறதும் கேக்குறதும் இப்போ!**
**கைநாட்டு என்று சொல்லி கை நீட்டி கண்டபய**
**கைகொட்டி சிரிச்ச தெல்லாம் அப்போ – நாங்க**
**(தன்னேன்னே)**

**கைரேகை விட்டுவிட்டு**
**கையெழுத்து நாட்டி விட்டோம் இப்போ**
**புரோ நோட்டு பொய் கணக்கில்**
**புரியாம ரேக வச்சு**
**(தன்னேன்னே)**

**வீடு வாச இழந்த தெல்லாம் அப்போ – இந்த**
**ஏழு பாழு வயித்திலடிக்கும் ஏச்சி பொழைக்கும் எத்தர்களும்**
**ஏமாந்து போயிடுவார் இப்போ**
**கடுதாசி வந்தபோது எழுதப் படிக்க ஆள்தேடி**
**(தன்னேன்னே)**

**கால்பிடிச்சி திரிஞ்சதெல்லாம் அப்போ – நாங்க**
**காலு மேல காலப்போட்டு காலர தூக்கி விட்டு**
**கடுதாசி பாக்குறதும் இப்போ (தன்னேன்னே)**

# நாலும் தெரிஞ்சிக்கிட்டோம்

நாகை மாவட்டத்தில் வளர்கல்வி இயக்கம் நமது மாவட்ட ஆட்சியரின் தலைமையில் சிறப்பாக செயல் படுத்தப்பட்டு வருகிறது. முழு எழுத்தறிவு கொண்ட மாவட்டமாக உருவாக்க வேண்டும் என்ற கனவுகளுடன் முனைப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

வளர்க்கல்வி ஏன்?சில தினங்களுக்கு முன்பு நம் நாகை மாவட்டத்திலுள்ள குத்தாலம் ஒன்றியத்திற்குட்பட்ட கொழையூர் கிராமத்தில் இயங்கி வரும் வளர்கல்வி மையத்திற்கு செல்ல வாய்ப்பு கிடைத்தது.



கிட்டத்தட்ட 40 நபர்களை கொண்ட இம்மையம் சிறப்பாக செயல்படுவது குறிப்பிடத்தக்கது. எழுத்தறிவு இல்லாத பலரும், வறுமையின் காரணமாக படிப்பை இடை நின்ற சிலரும் வளர்க்கல்வி மூலம் பயனடைந்து வருகின்றனர். வளர்க்கல்வி பயனாளிகளிடம் வளர்க்கல்வி ஏன்? என்ன பயன்? என்று நாம் கேட்ட போது மகேஸ்வரி என்ற பெண்மணி நம்மை நோக்கி "அறியாமையை போக்கி விழிப்புணர்வை ஏற்படுத்தும். நாலு பேரிடம் சகஜமாக பேச முடியும். முன்பெல்லாம் புதியவர்களிடம் பேசுவதற்கு தயங்குவோம் தற்போது தயக்கமில்லாமல் நன்றாக பேச முடிகிறது" என்றார்.

திருமதி.ஜெயா திருமேணி கூறுகையில் "இதற்கு முன்னாடி கையெழுத்து எனக்கு போடத் தெரியாது. எழுத்துக்கூட்டியும் படிக்கத் தெரியாது வளர்கல்வியில் சேர்ந்த பின்னாடி கொஞ்சம் கொஞ்சமாக எழுதப் படிக்க கத்துக்கிட்டேன் சுயஉதவிக்குழு நோட்டிலும், பிள்ளைகளின் ரேங்க் கார்டிலும் கையெழுத்து போட முடியுது. முன்னெல்லாம் ஏதாவது செய்திகளை டி.வி.பார்த்துதான் தெரிஞ்சிப்பேன். ஆனால் இப்பெல்லாம் செய்திகளை படிச்சி தெரிஞ்சிக்கிறேன். அதுமட்டு மில்லாமல் எங்க குழந்தைகளுக்கும் படிப்பு சொல்லித்தர முடியுது" என்பதை உற்சாகமாகக் கூறிக் கொண்டு நம் எதிரே கரும்பலகையில் எழுதப்பட்டிருந்த வாசகங்களை கடகடவென படித்த போது வியப்படைந்தோம்.

நம் எதிரே அமர்ந்திருந்த திருமதி.மகாலெஷ்மி குணசேகரன் அவர்களிடம் வளர்கல்வி குறித்து கேட்கையில், "நான் 3-வது வரையும் தான் படிச்சேன். எனக்கு சரியாக எழுத படிக்கவே தெரியாது. ஆனால் இந்த வளர்கல்வி மையத்தில் சேர்ந்த பிறகு நல்லா எழுதவும் படிக்கவும் கத்துக்கிட்டேன். ஏதாவது ஊருக்கு போனும்னா பஸ்ல இருந்த ஊர் பேரை படிக்கத் தெரியாமல் யாரையாவது கேட்டோம். இப்போ நானே எழுத்துக்கூட்டிப் படிச்சி தெரிஞ்சிப்பேன். கைநாட்டு போட்ட நாங்க இப்போ கையெழுத்து போடுறோம்" என்றார் பெருமையாக.

திருமதி. ராதாமாதவன் கூறுகையில் "முன்னெல்லாம் கையெழுத்துப் போடவும், படிக்கவும் தெரியாது இந்த மையத்தில் சேர்ந்த பிறகு எங்க வீட்டுக்கு வந்த தபாலை முன்பு போல் பிறரிடம் கொடுத்து படிக்கச் சொல்லாமல் நானே படித்து விஷயத்தை தெரிஞ்சிக்கிறேன்" என்றார்.

இந்த மையத்தில் சேர்ந்து பயன்பெறும் செல்வி.சூர்யா கூறுகையில் "எங்க வீட்டில் மொத்தம் 5 பொம்பள பிள்ளைங்க சார். ஆறாவது வரைக்கும் வீட்டில் படிக்க வைச்சாங்க. எனக்கு படிப்பு சரியாக வராததால பள்ளியை விட்டு நின்னுட்டேன். இப்போ வளர்கல்வி மையத்தில் சேர்ந்து படிப்பதால் பள்ளிக்கு சென்று படிக்க ஆர்வமாக உள்ளது என்று உற்சாகத்தோடு பேசினார்.

இவ்வளர்கல்வி மையத்தில் எழுத்தறிவை மட்டும் போதிக்காமல், எய்ட்ஸ் விழிப்புணர்வு, போலியோ சொட்டு, மருந்து விழிப்புணர்வு, சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு போன்றவைகள் சொல்லிக் கொடுக்கப்பட்டு இவர்களின் மூலமாக ஊரிலுள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.



இவர்களின் ஊக்கத்தையும் ஆக்கத்தையும் பார்க்கும் போது நமது மாவட்டம் முழுமையான எழுத்தறிவு பெற்ற மாவட்டம் என்ற நிலையை எட்டுவது தொட்டுவிடும் தூரம் தான் என்பதை உணர முடியகிறது.

## பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் மூலம் தொழில் நிறுவனங்களில் பயிற்சி

**ஊரக இளைஞர் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு சான்றிதழ் பயிற்சிகள்**

பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் மற்றும் தொழிற்நிறுவனங்களின் இணைப்பு மையம் இணைந்து வழங்கும் வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்புத்திட்டம்.

மேற்கண்ட திட்டத்தில் 18 வயதிற்கு மேற்பட்ட 5-ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் படித்து வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு ஓராண்டுக்கு பெரிய தொழிற்சாலைகளில் பயிற்சி கொடுத்து அவர்களுக்கு பல்கலைக்கழகச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. பயிற்சிக் காலங்களில் மாதம் ஒன்றுக்கு ஊக்கத்தொகையாக ரூ.1500/- வழங்கப்படுகிறது.

**பயிற்சி**

1. CNCஇயந்திர ஆபரேட்டர் (CNC Machine Operator) (+2 தேறிய / தவறியவர்)
2. ஆர்க் வெல்டர் (Arc Welder)
3. மிக் வெல்டர் (Mig Welder)
4. டிக் வெல்டர் (Tig Welder)
5. பிட்டர் (Fitter)
6. எலக்ட்ரீசியன் (Electrician)
7. மார்க்கர் (Marker)
8. கிரைண்டர் (Grinder)
9. மெஷினிஸ்ட் (Machinist)
10. டர்னர் (Turner)

பயிற்சி முடிந்து அந்த நிறுவனங்களிலோ அல்லது வேறு தொழிற்நிறுவனங்களிலோ வேலை அளிக்கப்படும். மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**எம்.சிவானந்தம், இயக்குநர்**
**ஊரக மேம்பாட்டு மையம், பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம்**
**பெரியர் நகர், வல்லம், தஞ்சாவூர்.**
**கைபேசி: 9952456858, 9944495760,**
**பேரா.கே.வி.ஆர். இராஜேந்திரன், இயக்குநர் (பொ)**
**தொழில் நிறுவனங்களின் இணைப்பு மையம்**
**பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம்**
**கைபேசி: 9944495721, 99444495707, 9944495685,**

**பயிற்சி கட்டண விபரங்கள்**

**1. விண்ணப்படிவம் ரூ. 20**

**2. சேர்க்கைகட்டணம் ரூ. 250**

**3. முன்வைப்புத் தொகை**

**(பயிற்சியில் சேர்ந்து ஆறு மாதங்கள் கழித்து திருப்பி தரப்படும்)**

**அ) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - மற்றவர்களுக்கு**

**1. ஆண்டு வருமானம் ரூ.18,500/-க்கு குறைவாக இருந்தால் ரூ.1000/-**

**2. ஆண்டு வருமானம் ரூ.18,500/-க்கு மேல் ரூ.37000/- வரை ரூ.1500/-**

**3. ஆண்டு வருமானம் ரூ.37,000/- மேல் ரூ.2500/-**

**குறிப்பு:-**

**பயிற்சியில் சேருபவர்களுக்கு கீழ்கண்டவை வழங்கப்படும்**

**1. சீருடை, 2. காலணி, 3. பை, 4.பேனா, 5.நோட் புக், 6.பைல்**

## மக்கள் பங்கேற்ப்பால் சீரான வாய்க்கால், வடிகால்கள் ஒரு கண்ணோட்டம் – கடைமடை –ஒன்று (TER-1)

நமது நாகை மாவட்டத்தில் விவசாய துறையில் பேரிடர் பாதிப்பை குறைக்கும் நடவடிக்கைகளில் மாவட்டத்தின் கடைமடைகளான மஞ்சளாறு, கடுவையாறு, தெற்குஇராஜன் ஆகியவற்றில் மக்கள் பங்கேற்புடன் கூடிய நீர்வள மேலாண்மைத்திட்டம், அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பாசனதாரர் சங்களின் மூலமாக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவது தாங்கள் அறிந்ததே. இத்திட்டம் செயலாக்கம் குறித்த செய்திகளை நாம் அலையாத்தியில் தொடர்ந்து பகிர்ந்து வருகின்றோம். கடந்த மாதத்தின் தொடர்ச்சியாக இம்மாதம் கடைமடை ஒன்றில் நடந்து முடிந்துள்ள பணிகளை தாங்கள் அறியும் நோக்கோடு வெளியிடுகிறோம்.

<u>கடை மடை ஒன்று (தெற்கு இராஜன் ஆறு)</u> (TER-1)

கடைமடை -1 தெற்கு இராஜன் ஆறு மூலம் பயனடையும் காட்டூர் மற்றும் மகேந்திரப்பள்ளி ஊராட்சிகளில் முன்மாதியாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு தற்போது விவசாய துறையில் இம்மக்கள் பெரும் மாற்றத்தை சந்தித்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நிறுவனத்தின் மூலம் ரூ.2,66,000/- மக்கள் பங்களிப்பாக ரூ.19,391/- சேர்த்து மொத்தம் ரூ.2,85,391/- செலவில் 17-ஏ வகை பாசன வாய்கால்களிலும் 11-பி வகை பாசன வாய்காய்களிலும் தூர்வாறும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 7 இடங்களில் கரைகள் பலப்படுத்தும் பணியும், திறந்த நிலையிலேயே இருந்த 36 தடுப்பு கவணைகளிலில் செருகு பலகை மற்றும் 6 இடங்களில் உப்புநீர் உட்புகாதவண்ணம் தடுப்பு கவணைகளும் அமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக பல்வேறு முயற்சிகளாலும் சீர்செய்யப்படாத வாய்க்கால், வடிகால்கள் இந்த ஆண்டு சீர் செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் வெள்ளம் போன்ற பேரிடர் காலங்களில் விவசாய நிலங்கள் மற்றும் பயிர்களில் ஏற்படும் பாதிப்பை தடுக்க உதவும் என்று அப்பகுதி மக்கள் நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றனர். மேலும் கிராம மக்களின் சீரிய கூட்டு முயற்சியும், பொதுப்பணித்துறை மற்றும் பெட்ராக் நிறுவனத்தின் சிறப்பான வழிக்காட்டுதலே இந்த மாற்றத்திற்கு காரணம் என்கின்றனர் இவ்வூர் பாசனதாரர் சங்க உறுப்பினர்கள்.

# விழி திறந்தால் வழி பிறக்கும்

"தேடு கல்வியில்லா ஊரை தீயினுக்கு இரையாக்குவோம்" என்ற தன் உணர்ச்சி குரலை வெளிப்படுத்தினான் பாரதி. எந்த ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் முதல் படியாக விளங்குவது கல்வி ஒன்றே. வளர்ந்து விட்ட நாகரீக உலகில் கல்வியின் அவசியத்தை உணர்ந்த அரசு பல்வேறுபட்ட கல்வி நல திட்டங்களின் வாயிலாக மக்களிடையே கல்வியின் பயன் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு இன்று கிராமபுற மாணவனுக்கும் எளிதாக கல்வி எட்டும் வகையில் கல்வி நிலையங்களை நிறுவியுள்ளது. அறியாமையில் கிடந்த மக்களும் கல்வி ஒன்றே எதிர்காலத்தில் தன் குழந்தைகளை வளர்ச்சி பாதைக்கு அழைத்து செல்லும் என்பதை உணர்ந்துள்ளார்கள் என்பதை தான் நமக்கு எடுத்து காட்டுகிறது இந்த வேம்படி கிராமம்.

நாகை மாவட்டத்தின் சீர்காழி தாலுக்காவிற்கு உட்பட்டது வேட்டங்குடி பஞ்சாயத்து. அடிப்படை வசதிகளில் சற்றே பின் தங்கிய, இப்பஞ்சாயத்தின் குக்கிராமங்களில் ஒன்றான வேம்படியில் மொத்தம் 80 குடும்பங்கள் வசிக்கின்றன. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என சுமார் 500 பேரை கொண்டது இக்கிராமம். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்புவரை கல்வியின் அவசியம் குறித்த அறியாமையாலும், கல்வி கற்க போதுமான அடிப்படை வசதிகள் இல்லாத சூழ்நிலையாலும் மற்றும் முக்கிய தொழிலாக விளங்கிய விவசாயம், மேட்டூர் அணையில் திறந்து விடப்படும் நீர்வரத்து தொடர்ந்து குறைந்து வருவதன் காரணமாக ஏற்பட்ட வறட்சியாலும், ஊரை ஒட்டியுள்ள உப்பனாற்றில் ஏற்படும் வெள்ளப் பெருக்காலும் பாதிக்கபட்ட நிலையில் வறுமையின் காரணமாக கல்வி என்பது இவர்களுக்கு எட்டா கனியாகவே இருந்து வந்தது. ஆரம்ப கல்வியையே அரைகுறையாக முடித்து வந்த இவர்களின் வாழ்க்கையில் கல்வியில் படிப்படியான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மாற்றங்கள் என்ன? மாற்றத்திற்கான காரணம் என்ன? என்பதை சற்றே அலசியிருக்கிறோம் அலையாத்தியில்.



முக்கிய தொழிலாக விளங்கிய விவசாயம் நலிவடைந்ததால் இம்மக்கள் பிழைப்பிற்காக மாற்று தொழில் தேடி இடம்பெயர்ந்து அண்டை மாநிலமான கேரளா மற்றும் தமிழ்நாட்டின் சத்தியமங்கலம், நாமக்கல், பவானி, கொள்ளிமலை என பல்வேறு பகுதிகளுக்கும் சென்று செங்கல் தயாரிப்பிற்காக கல்லறுக்கும் தொழில் செய்கின்றனர். இவ்வூரில் உள்ள அனைத்து குடும்பங்களிலிருந்து இருவர் அல்லது மூவர் என இடம் பெயர்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. படிப்பறிவு இருந்திருந்தால் இப்படி கஷ்டப்பட தேவையில்லையே என்று கல்வியின் அவசியத்தை இன்று உணரும் இம்மக்கள் தற்போது கிடைக்கும் வருமானத்தை கொண்டு அவர்களின் பிள்ளைகளின் படிப்பில் அக்கரை செலுத்தி வருகின்றனர். மேலும் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் 15 கி.மி.தூரமுள்ள சீர்காழி நகருக்கு நடந்து சென்றுதான் படித்துவிட்டு வரவேண்டுமாம். ஆனால் தற்போது இவ்வூரிலேயே ஆரம்ப கல்வி நிலையம் செயல்பட்டு வருகிறது. மேல்நிலை கல்விக்காக இவ்வூரில் இருந்து 8 கி.மி. தூரமுள்ள கோதண்டபுரம், 5 கி.மீ. தொலைவிலுள்ள திருமுல்லை வாசல், மாதானம், 30 கி.மீ. தூரமுள்ள சிதம்பரம், 15 கி.மீ. தூரமுள்ள சீர்காழி போன்ற ஊர்களுக்கு செல்ல தற்போது பேருந்து வசதிகள் இருப்பதாலும், அரசாங்கத்தின் மூலம் வழங்கப்படும் பல்வேறு கல்விச் சலுகைகளினாலும் கல்வியின் சதவிகிதம் சற்றே உயர்ந்துள்ளது.

10 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் ஒருசில வீடுகளிலேயே மின்சார வசதி இருந்து வந்தது. தற்போது அனைத்து வீடுகளிலும் மின் வசதி இருப்பது பிள்ளைகளின் படிப்பிற்கு உறுதுணையாக உள்ளது. கடந்த 2005-ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட இம்மக்களுக்கு உதவி செய்ய வந்த தொண்டு நிறுவனங்கள் கல்வியின் அவசியம் குறித்த விழிப்புணர்வை மிக சிறப்பாக ஏற்படுத்தி உள்ளது. கல்வி உதவித்தொகைகள் மற்றும் கற்பதற்கு தேவையான உபகரணங்கள் வழங்குவதன் மூலமும், குழந்தை தொழிலாளர்கள் மற்றும் பள்ளியில் இடைநின்றவர்களை கண்டெடுத்து பெற்றோர்களிடையே கல்வியின் அவசியத்தை தொடர்ந்து உணர்த்தி வருவதன் மூலமும் தற்போது கல்வி நிலை சற்றே தலைதூக்கி உள்ளது. அரசின் மூலம் கிடைக்கபெறும் கல்வி உதவித்தொகைகள், கடன் வசதிகள் கல்லூரி பயிலும் மாணவர்களுக்கு உதவியாக இருப்பதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

10 வருடங்களுக்கு முன் கல்லூரி படிப்பையே கண்டிராத இக்கிராமத்தில் தற்போது பொறியியல் துறை, செவிலியர் பயிற்சி, இளங்கலை மற்றும் முதுகலை பட்டபடிப்பு என நான்கு பேர் கல்லூரியில் பயிலுகின்றனர் என்பது சிறந்த மாற்றமே. பிழைக்க வெளியூர் சென்றாலும்

தங்கள் பிள்ளைகளை வயதான பெற்றோர்களின் கண்கானிப்பில் செல்வதால் கல்வி கற்பதில் தம் குழந்தைகளுக்கு எந்த தடையும் ஏற்படுவதில்லை என்று தெரிவிக்கிறார்கள்.

தற்போது இவ்வூரில் அனைத்து பள்ளி வயது குழந்தைகளும் கற்கிறார்கள். எனவே அறியாமை என்பது அகற்றப்பட்டு எங்களை போல் வாழ்க்கையில் கஷ்டப்படாமல், உயர்வான வேலை வாய்ப்புகளை எங்கள் பிள்ளைகள் பெறுவார்கள் என்று நம்பிக்கை தெரிவிக்கின்றனர் இம்மக்கள்.

“நாங்கள் தான் கண் தெரியாமல் இருந்து விட்டோம். எங்கள் பிள்ளைகள் கண்களாவது தெரியட்டும் அதன் மூலம் நாங்கள் இந்த உலகை காண முயற்சிப்போம்” என்று நம்மை நோக்கி ஒலித்த ஒரு பெண்மணியின் குரல் கல்வியின் அவசியத்தை நம் மக்கள் அறிந்து விட்டார்கள் என்பதை உணர்த்துகிறது.

61-ம் சுதந்திர தினத்தில் அனைவருக்கும் கல்வி என்ற எண்ணம் நிஜமாகி கொண்டிருக்கிறது என்பதை இக்கிராமத்தைக் கொண்டே கணிக்கமுடிகிறது.

கற்போம் ! கல்லாமை இல்லா சமுதாயத்தைப் படைப்போம்!.

## மேம்பாட்டுப் பணியில் மக்களின் பங்கு

பேரிடர் மேலாண்மை மற்றும் பாதிப்பு குறைப்பில் உள்ளூர் தலைமைத்துவம் எவ்வாறு மேம்பட்டு இருக்கிறது என்ற ஆய்வை ஆக்ஸ்பாம் அமெரிக்கா மற்றும் பெட்ராக் தொண்டு நிறுவனம் இணைந்து கடலூர் மாவட்டத்தில் பச்சையாங்குப்பம் ஊராட்சியில் சொத்திக்குப்பம் என்ற மீனவ கிராமத்தில் மேற்கொண்டது. இங்கு மக்களின் நீண்ட கால தேவை எவ்வாறு பூர்த்தி அடைந்துள்ளது. அதில் அவர்களுடைய பங்கு என்ன? என்பதை விளக்கவே இக்கட்டுரை.

இந்த கிராமத்தில் மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 429 மொத்த மக்கள் தொகை 1688. இந்த கிராமம் மூன்று பக்கங்களும் நீரால் சூழப்பட்டுள்ளது. ஆற்றை தோணி மூலம் கடந்து சென்றுதான் மக்கள் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து வந்திருக்கின்றனர். அவ்வூர் மக்கள் தங்களுக்கு மேம்பாலம் கேட்டு அடிக்கடி மனு கொடுத்து அரசிடம் பல வருடங்களாக போராடி வந்தனர். தற்போது அமைக்கப்பட்டு வரும் பாலமானது இவர்களுக்கு மட்டுமல்லாமல் கடலூர் முகத்துவாரத்திலிருந்து பரங்கிப்பேட்டை வரை வங்காள விரிகுடாவிற்க்கும் இடையேயான அனைத்து மீனவ கிராமங்களுக்கு பிரதான நிலப்பரப்போடு சாலை வழி இணைப்புக்கு மிகவும் பயனுள்ளதாகவும் இருக்கும்.

சுனாமியில் தப்பி ஓடி உயிரை காப்பாற்றிக்கொள்ள முயன்ற 24 உயிர்கள் (22 குழந்தைகள், 2 பெண்கள்) ஆற்றை கடக்க பயன்பட்டிருந்த தோணிக்கான ஜெட்டியில் நின்றிருந்தபோது சுனாமி நீர் ஆறு வழியாக வந்து அவர்களை காவு வாங்கியது. ஆறுதல் கூறி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு பணிகள் செய்ய வந்த அதிகாரிகள், தலைவர்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் என அனைவரிடமும் இம்மக்கள் தங்களின் முக்கிய தேவையை ஒரே குரலில் பதிவு செய்தனர். இதற்கு பின்னரே அரசு அவர்களின் அவசியத்தை உணர்ந்து பாலம் கட்டும்பணி நடைமுறைக்கு கொண்டு வந்தது. தற்போது இங்கு பாலம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு மக்கள் பங்களிப்பாக மக்களின் ஊர் பொது நிதியிலிருந்து ரூ.3 இலட்சத்திற்கு நிலம் வாங்கிக் கொடுத்துள்ளனர். மேலும் மணல் குன்றுகளில் உள்ள மணலை பயன்படுத்தி தற்காலிக மண் பாலம் அமைத்துள்ளனர். பாலம் அமைக்கும் போது நீர் வரத்தின் அதிகரிப்பால் மணல் அறுத்து அடைப்பதற்கு சிரமப்பட்ட நிலையில், இந்த நீர் பெருக்கை தடுப்பதற்காக ஒரு தோணியை ஆற்றில் இறக்கி, தோணியின் மேல் மணல் கொட்டி பாலத்தை அமைத்தனர். இவ்வூரின் நலனுக்காக அந்த கிராம மக்கள் தங்கள் தொழிலுக்குகூடச் செல்லாமல் மறியல் செய்து, மேம்பாலம் அமைக்கும் பணியில் ஒட்டு மொத்தமாக ஈடுபட்டு தங்கள் பங்களிப்பை உறுதி செய்துள்ளனர். ஊரின் மேம்பாட்டிற்கு மக்களின் பங்கேற்பால் மட்டுமே சிறப்பான வெற்றியை பெற்று தர முடியும் எனவும், மேலும் இம்மேம்பாலத்தின் மூலம் எதிர்காலத்தில் எங்களின் பேரிடர் எதிர்கொள்ளும் திறனும் பேரிடர் மேலாண்மையும் பலப்படும் எனவும் நம்பிக்கையுடன் தெரிவிக்கிறார்கள் இம்மக்கள்.

சொத்திகுப்பம் கிராமத்தை சேர்ந்த மக்கள் தங்கள் தேவைகளையும், பிரச்சனைகளையும் நன்கு அறிந்து அரசுடன் நீண்ட காலமாக போராடி வெற்றியடைந்துள்ளனர்.

*நம் கிராமத்தின் பிரச்சனைக்கு யார் தீர்வு காண வேண்டும் ?*

*நம் கிராமத்திற்கு என்ன வளங்கள் தேவை என்று யார் அறிய வேண்டும் ?*

*அரசாங்கமா ?*
*தொண்டு நிறுவனமா ?*
*ஊராட்சி மன்றமா ?*
*கிராம பஞ்சாயத்தா ?*
*ஊரின் பொதுக் குழுக்களா ?*
*சுயஉதவிக்குழுக்களா ?*
*கிராம மக்களாகிய நாம் அனைவருமா ?*

வாசகர்களே! உங்கள் பதிலை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி ... **bedroc**

குடியிருப்பு எண்.5, மேட்டுபங்களா, புதிய கடற்கரைச் சாலை,காடம்பாடி,
நாகப்பட்டினம்-611 001.
மின் அஞ்சல் : *alaiyathi@bedroc.in*

# ஒரு பள்ளிக்கு ஏற்புடைய குறைந்தபட்ச தரம்

- கல்வி என்பது இலவசமாகவும் கட்டாயமாகவும் இருப்பதோடு குழந்தைகள் அக்கல்வியை சுமையின்றி, ஆர்வத்தோடு கற்று தேர்ச்சி பெறும் அளவிற்கு தரமானதாகவும் அமைய வேண்டும்.
- குழந்தையின் தாய்தொழியே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும்.
- பள்ளி கல்வி என்பது மனித உரிமைகள், நீதிக்காவும் சமூக சமத்துவமின்மையை குறைப்பதற்கும் உரிய ஓர் இடம்.
- ஒரு வகுப்பிற்கு அல்லது 30-40 குழந்தைகளுக்கு ஒரு வகுப்பறை.
- 220 வேலை நாட்கள் குழந்தைகளிடம் கட்டாயம் இருக்க வேண்டிய அம்சங்கள் தேர்ச்சி பெற்ற ஆசிரியர் ஒரு வகுப்பிற்கு ஒருவர்.
- அனைத்துப் பள்ளிகளிலும் குறிப்பாக ஆரம்ப மற்றம் தொடக்கப் பள்ளிகளில் விளையாட்டு மற்றும் ஓய்விற்கு போதுமான இடவசதி அளித்தல்
- பயிற்று கட்டணத்திற்கு விதிவிலக்கும், இலவச உணவு, பாடப்புத்தகம், குறிப்பேடு, சீருடை, போக்கு (தேவைப்பட்டால்) போன்ற இதர வசதிகளும் அளிக்கப்பட வேண்டும்.
- உயயோகப்படுத்துமளவு உள்ள கரும்பலகை எழுது கோல், அட்டைப்படங்கள், கற்பிக்கும் உபரணங்கள் இருக்க வேண்டும்.
- பள்ளிகளில் மகிழ்ச்சிகரமான ஈர்க்கும் தன்மையுள்ள கற்கும் சூழல் இருத்தல் வேண்டும். குழந்தைகள் மீதான அனைத்து அத்துமீறல்களும் வன்முறைகளும் ஒவ்வொரு பள்ளிகளிலும் முழுமையாக தடை செய்யப்பட வேண்டும்.
- பாடத்திட்டமானது குழந்தையை மையமாக கொண்டுள்ளதாகவும் பங்கேற்பை ஊக்குவிப்பதாகவும், பொருத்தமானதாகவும், கற்றலின் சுமையை குறைப்பதை அடிப்படையாகக் கொண்டும் இருத்தல் வேண்டும்.
- தேர்வுமுறைக்கு பதிலாக பங்கேற்புடனாக மதிப்பீடு முறையும் கற்றல் முறையும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அனைத்துக் குழந்தைளும் குறைந்தபட்ச அளாவாவது கற்றிலின் தேர்ச்சி அடைந்தார்களா என்பதை உறுதி செய்யும் பதிவேடு இருத்தல் வேண்டும்.
- பள்ளியை விட்டு நின்றுவிடும் குழந்தைத் தொழிலாளர்கள், ஊனமுற்ற குழுந்தைகள், பெண் குழந்தைகள், சூழ்நிலையால் இடம் பெயர்ந்த குழந்தைகள் ஆகியோரை அரவணைக்க கூடிய வகையில் பள்ளிகள் அமைய வேண்டும். அரசு சாரா அமைப்புகளால் நடத்தப்படும் பள்ளிகளில் உள்ள குழந்தைகளுக்கான சிறப்பு முறைகள் தோற்றுவிக்கப்பட வேண்டும். இம்முறை அக்குழந்தைகளை மீண்டும் முறையான பள்ளிக் கல்வியில் ஒருங்கிணைப்பதாக இருக்க வேண்டும்.
- எல்லா ஆரம்ப நடுநிலை பள்ளிகளுக்கும் ஒரு கட்டிடம் போதுமான மற்றும் பாதுகாப்பான குடிநீர், மின்சாரம் மற்றும் குழாய் தண்ணீர் வசதி பொருந்திய கழிவறைகள் இருத்தல் வேண்டும்.

வளம் : ஜான் பிரிட்டோ அவர்களின் இனிமேல் இனிக்கும் என்ற நூலிலிருந்து .... (பதிப்பு - 2005)


தொடர்புக்கு ...

**TRINet**

The Resource and Information Network : for the coast

டிரைநெட்,

மே/பா பூமிகா அறக்கட்டளை, அடுக்ககம் 3அ, புதிய எண். 41, முரேஸ் கேட் சாலை, ஆழ்வார் பேட்டை, சென்னை - 600 018



தனிச்சுற்றுக்கு மட்டும்

**bedroc**

குடியிருப்பு எண்.5, மேட்டுபங்களா, புதிய கடற்கரைச் சாலை, காடம்பாடி, நாகப்பட்டினம்-611 001.

போன்: 04365-247687, 247688

இமெயில் : *alaiyathi@bedroc.in*